## இந்தியாவில் குழந்தைகள் கடத்தல் முதல் 3 இடங்களில் உ.பி., பிஹார், ஆந்திரா: கைலாஷ் சத்யார்த்தி அறக்கட்டளை ஆய்வில் தகவல்



**புதுடெல்லி:** இந்தியாவில் குழந்தைகள் கடத்தலில் உத்தரபிரதேசம், பிஹார், ஆந்திரா ஆகிய மாநிலங்கள் முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.

கேம்ஸ் 24x7 மற்றும் கைலாஷ்சத்யார்த்தி குழந்தைகள் அறக்கட்டளை ஆகியவை இணைந்து 'இந்தியாவில் குழந்தைகள் கடத்தல்' என்ற தலைப்பில் ஒரு ஆய்வை மேற்கொண்டன. இந்தஆய்வின் அறிக்கை, ஆட்கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தைமுன்னிட்டு நேற்று வெளியிடப் பட்டது.

அதில் கூறியிருப்பதாவது:

நாடு முழுவதும் 21 மாநிலங்களில் 262 மாவட்டங்களில் 2016 முதல் 2022 வரையில் குழந்தைகள் கடத்தல் தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட வழக்குகள் சேகரிக்கப்பட்டன. இதன்படி குழந்தைகள் கடத்தலில் உத்தரபிரதேசம், பிஹார் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகியவை முதல் 3 இடங்களைப் பிடித்துள்ளன.

டெல்லியைப் பொருத்தவரை கரோனா காலத்துக்கு முன்பு இருந்ததைவிட இப்போது குழந்தைகள் கடத்தல் 68 சதவீதம் அதிகரித்துள்ளது. குழந்தைகள் கடத்தல் அதிகமாக உள்ள நகரங்களில் ஜெய்ப்பூர் முதலிடத்தில் உள்ளது.

இந்த காலகட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட 13,549 குழந்தைகள் மீட்கப்பட்டுள்ளன. இதில் 80 சதவீதம் பேர் 13 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள். 13 சதவீதம் பேர் 9 முதல் 12 வயதுக்குட்பட்டவர்கள். 2 சதவீதம் பேர் 9 வயதுக்குட்பட்டவர்கள் ஆவர்.

பல்வேறு துறைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. இதில் ஓட்டல்கள் மற்றும் தாபாக்களில் அதிக அளவில் (15.6%) குழந்தை தொழிலாளர்கள் உள்ளனர். அடுத்தபடியாக வாகனங்கள் அல்லது போக்குவரத்துத் துறையும் (13%), ஆடை உற்பத்தித் துறையும் (11.18%) அதிக அளவில் குழந்தைத் தொழிலாளர்களை பணியமர்த்தி உள்ளது தெரியவந்துள்ளது.

அதேநேரம், குழந்தைகள் கடத்தலை தடுக்க மத்திய, மாநிலஅரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும்தெரியவந்துள்ளது.

குறிப்பாக, குழந்தை கடத்தல் தொடர்பான விழிப்பு ணர்வு பிரச்சாரங்கள் நடத்துவதன் மூலம், இது தொடர்பான தகவல் வெளிவருவதுடன் கடத்தல் சம்பவங்கள் குறைந்துள்ளன. அதேநேரம், குழந்தைகள் கடத்தலைத் தடுப்பதற்கான ஒருங்கிணைந்த சட்டம் கொண்டுவர வேண்டியதும் அவசியமாகிறது.

## அழியும் நிலையில் உள்ள பறவை, விலங்குகளை ஆவணப்படுத்தும் கோவை ஓவியருக்கு பிரதமர் பாராட்டு




**கோவை**: அழியும் நிலையில் உள்ள விலங்குகள் மற்றும் தாவரங்களை வரைந்து ஆவணப்படுத்தி வரும் கோவை ஓவியரை, மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பாராட்டினார்.

வானொலியில் நேற்று ஒலிபரப்பான மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசுகையில், “பலமுறை நாம் சூழலியல், தாவரங்கள், விலங்குகள், உயிரிப் பன்முகத்தன்மை போன்ற சொற்களைக்

EVA STALIN IAS ACADEMY

கேட்கும்போது, இது ஏதோ தனிச்சிறப்பு வாய்ந்த விஷயங்கள் என்று நினைக்கிறோம். ஆனால், அப்படி கிடையாது. நாம் உண்மையிலேயே இயற்கையின் மீது நேசம் கொண்டவர்கள் என்றால், நாம் சிறிய, சிறிய முயற்சிகளைக் கூட மேற்கொள்ளலாம். தமிழ்நாட்டில் வடவள்ளியைசேர்ந்த ஒரு நண்பரான சுரேஷ் ராகவன், அழியும் நிலையில் உள்ள பல்வேறு தாவரங்கள், விலங்குகளின் ஓவியங்களைத் தீட்டி அவற்றை ஆவணப்படுத்தியிருக்கிறார். கலையின் வாயிலாக இயற்கைக்குச் சேவை புரியும் இவரது பணி உண்மையிலேயே அற்புதமானது"என்று குறிப்பிட்டார்.

கோவை வடவள்ளி அருகே பி.என்.புதூர், புதிய ஆனந்த நகரைச் சேர்ந்த ஆர்.சுரேஷ் (59), தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள, இந்திய தாவரவியல் ஆய்வு மையத்தில் (பிஎஸ்ஐ) ஓவியராக பணிபுரிகிறார். தனது கலையின் மூலம் ஓரிடவாழ் (எண்டெமிக்), அழியும் நிலையில் (எண்டேஞ்சர்டு) உள்ள பறவைகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்ல ஆவணப்படுத்த எண்ணி, 2018 முதல் மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள அரியவகை பறவைகள், விலங்குகள், தாவரங்களை வரைந்து ஆவணப்படுத்தி வருகிறார்.

பிரதமரின் பாராட்டு குறித்து 'இந்து தமிழ்' நாளிதழிடம் சுரேஷ் கூறியதாவது: மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள 30 ஓரிடவாழ் பறவைகள், 18 வகை விலங்குகள், 126 ஓரிடவாழ் தாவரங்கள், இந்திய அளவில் 50 ஓரிடவாழ் பறவைகள், 46 வகை விலங்குகள், இந்திய அளவில் அழியும் நிலையில் உள்ள 12 வகை பறவைகளை வரைந்து ஆவணப்படுத்தியுள்ளேன். வரையும்போது, பறவை இறகுகளின் நிறம், விலங்குகளின் தோல் நிறம், தாவரங்களின் தோற்றம் ஆகியவை எந்த விதத்திலும் மாறுபடக்கூடாது என்பதால், ஒவ்வொரு உயிரினம்,

தாவரத்தின் புகைப்படங்களை பல்வேறு கோணங்களில் சேகரித்து வரைந்து வருகிறேன்.

இதற்காக சனி, ஞாயிறுகளில் தினமும் 8 முதல் 10 மணி நேரம் வரை செலவிடுகிறேன். நிபுணர்கள் பார்த்தவுடன் அதன் வகையை உறுதியாக தெரிந்துகொள்ளும் வகையில் மிக நுணுக்கமாக இருக்க வேண்டும் என்பதால், ஒவ்வொரு ஓவியத்தையும் வரைந்து முடிக்க சுமார் 3 முதல் 4 நாட்கள் ஆகும். தாவரங்களை வரைவது இன்னும் சிரமமானது. இலையின் முன்பக்கம் ஒரு தோற்றத்திலும், பின்பக்கம் வேறுமாதிரியும் இருக்கும்.மிகச் சிறிய தாவரங்களின் படங்களை நுண்ணோக்கி கொண்டு தோற்றத்தை பெரிதுபடுத்திப் பார்த்து வரைந்திருக்கிறேன். வரைவதோடு மட்டுமல்லாமல் ஒவ்வொரு பறவைகள், உயிரினத்தின் தமிழ், ஆங்கில பெயர்கள், அறிவியல் பெயர், அவை வாழுமிடம் ஆகிய தகவல்களையும் நிபுணர்களின் உதவியுடன் சரிபார்த்து ஓவியங்களோடு அந்த தகவல்களையும் அச்சிட்டுவைத்துள்ளேன். என்னைப்போன்ற சாதாரண ஓவியரின் பணிகளை வெளியுலகுக்கு எடுத்துக்காட்டி பிரதமர் பாராட்டியது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதற்காக பிரதமருக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அவரது வார்த்தைகள் உத்வேகம் அளிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

EVA S

## பிஎஸ்எல்வி-சி56 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது: சிங்கப்பூரின் 7 செயற்கைக்கோள்கள் நிலைநிறுத்தம்



**சென்னை:** இஸ்ரோவின் பிஎஸ்எல்வி-சி56 ராக்கெட் மூலம் சிங்கப்பூரின் 'டிஎஸ்-சார்' உள்ளிட்ட 7 செயற்கைக்கோள்கள் வெற்றிகரமாக விண்ணில் நிலைநிறுத்தப்பட்டன.

தகவல் தொடர்பு, தொலை உணர்வு மற்றும் வழிகாட்டுதல் செயற்கைக்கோள்களை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) விண்ணில் நிலைநிறுத்தி வருகிறது. வெளிநாட்டு செயற்கைக்கோள்களை வணிக ரீதியாகவும் விண்ணில் செலுத்துகிறது.

அதன்படி, சிங்கப்பூருக்கு சொந்தமான 'டிஎஸ்-சார்' உள்ளிட்ட 7 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோவின் என்எஸ்ஐஎல் அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. இதையடுத்து, பிஎஸ்எல்வி-சி56 ராக்கெட் மூலம் சிங்கப்பூர் செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த இஸ்ரோ முடிவு செய்தது.

இதற்கான 24 மணி நேரகவுன்ட் டவுன் நேற்று முன்தினம் தொடங்கியது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் மையத்தின் முதல்ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி- சி56 ராக்கெட் நேற்று காலை 6.31 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

புறப்பட்ட 24 நிமிடங்களில்7 செயற்கைக்கோள்களும் 536 கி.மீ. தொலைவு கொண்ட திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டன. இதில் முதன்மை செயற்கைக்கோளான டிஎஸ்-சார், 352 கிலோ எடை கொண்டது. அதிநவீன புவி கண்காணிப்பு

செயற்கைக்கோளான இது, சிந்தடிக் அப்ரேச்சர் ரேடார் தொழில்நுட்பத்தில் இயங்கக்கூடியது. இரவு, பகல் மற்றும் அனைத்து பருவநிலைகளிலும் துல்லியமான படங்களை எடுத்து வழங்கும்.

இதனுடன் ஏவப்பட்ட வெலாக்ஸ்-ஏஎம் (23 கிலோ), ஆர்கேட் (24 கிலோ), ஸ்கூப்-2 (4 கிலோ), நியூலயன் (3 கிலோ), கலாசியா (3.5 கிலோ), ஆர்ப்-12 ஸ்டிரைடர் (13 கிலோ) ஆகிய 6 சிறிய செயற்கைக்கோள்களும் சிங்கப்பூரின் உயர்கல்வி நிறுவனங்கள், மாணவர்களால் வடிவமைக்கப்பட்டவை. இவை பல்வேறு தொழில்நுட்ப ஆய்வுகளுக்கு பயன்படுத்தப்படும்.

**இதுவரை 431 செயற்கைக்கோள்**: 1993 முதல் இதுவரை பல்வேறு நாடுகளை சேர்ந்த 431 செயற்கைக்கோள்களை, பிஎஸ்எல்வி ராக்கெட் மூலம் இஸ்ரோ விண்ணில் நிலைநிறுத்தியுள்ளது. சிங்கப்பூருக்கு சொந்தமான டெலியோஸ்-2 உள்ளிட்ட 2 செயற்கைக்கோள்கள் பிஎஸ்எல்வி-சி55 ராக்கெட் மூலம் கடந்த ஏப்.22-ம் தேதி விண்ணில் ஏவப்பட்டது.

ராக்கெட் ஏவுதலுக்குப் பிறகு, இஸ்ரோ தலைவர் எஸ்.சோம்நாத் விஞ்ஞானிகள் மத்தியில் பேசியதாவது:

பிஎஸ்எல்வி வெற்றிக்கு பங்காற்றிய இஸ்ரோ குழுவினருக்குவாழ்த்துகள். சிங்கப்பூர் நாட்டுக்காக மட்டும் இதுவரை 4 முறை செயற்கைக்கோள்களை இஸ்ரோ விண்ணில் செலுத்தியுள்ளது. இந்த வெற்றி இஸ்ரோவின் மீதானநம்பிக்கையை மேலும் அதிகரிக்கும். இதன்மூலம், பிஎஸ்எல்விராக்கெட் வணிக ரீதியான பயன்பாட்டுக்கு மிகவும் நம்பகமானது என்பது நிரூபணமாகியுள்ளது. அடுத்த ஆண்டு முதல் இந்த ராக்கெட்டை முற்றிலும் வணிக ரீதியிலான உபயோகத்துக்கு பயன்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புவியில் இருந்து 530 கி.மீ.தொலைவு கொண்ட சுற்றுப்பாதைகளில்தான் அதிக அளவிலான செயற்கைக்கோள்கள், விண்வெளிக் கழிவுகள் உள்ளன. இதனால் 300 கி.மீ. புவி தாழ்வட்டபாதையில் செயற்கைக்கோள்களை நிலைநிறுத்துவது குறித்து, தற்போது ஏவப்பட்ட ராக்கெட்டின் பிஎஸ் 4 இயந்திரம் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

வரும் ஆகஸ்ட் இறுதி அல்லது செப்டம்பர் முதல் வாரத்தில் அடுத்த பிஎஸ்எல்வி ராக்கெட் ஏவப்பட உள்ளது. தொடர்ந்து, ககன்யான் விண்கலம் இந்த ஆண்டு இறுதிக்குள் விண்ணில் செலுத்தப்படும். அதேபோல, எஸ்எஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி உள்ளிட்ட ராக்கெட்களை விண்ணில் ஏவுவதற்கான பணிகள் கைவசம் உள்ளன.

**வீடுதோறும் தேசியக் கொடி ஏற்ற வேண்டும்: சுதந்திர தினத்தையொட்டி 'என் மண், என் தேசம்' இயக்கத்தில் பங்கேற்குமாறு நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி அழைப்பு**

**புதுடெல்லி:** சுதந்திர தினத்தையொட்டி 'என் மண், என் தேசம்' இயக்கம் தொடங்கப்படும். இதன்படி, அவரவர் பகுதியில் இந்த தேசத்தின் புனித மண்ணை கையில் ஏந்தி செல்ஃபி புகைப்படம் எடுத்து இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். வீடுகள்தோறும் தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்று ஒலிபரப்பான 103-வது 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது:

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, புயல் உள்ளிட்ட இயற்கை பேரிடர்கள் நேரிட்டன. இந்த பேரிடர்களை பொதுமக்களும் மீட்பு படையினரும் திறம்பட எதிர்கொண்டனர். பேரிடரால் பாதிக்கப்பட்டோருக்கு மக்களே முன்வந்து உதவி செய்தனர். இதுதான் இந்தியாவின் பலம்.

மத்திய அரசின் முயற்சியால் நாடு முழுவதும் 50,000-க்கும் மேற்பட்ட நீர்நிலைகளை உருவாக்கும் பணிநடந்து வருகிறது. மத்திய பிரதேசத்தின் பகரியா கிராமத்தை சேர்ந்த பெண்கள் சுமார் 100 குளங்களை சீரமைத்துள்ளனர். மழைக் காலத்தில் இந்த குளங்கள் நிறைந்து, சுற்றுவட்டார பகுதிகளின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. அப்பகுதி பெண்கள் அடுத்தகட்டமாக 800 குளங்களை மீட்டெடுக்க உறுதிபூண்டுள்ளனர்.

உத்தர பிரதேசத்தில் சமீபத்தில் ஒரே நாளில் 30 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. இந்த சாதனையை நிகழ்த்திய மாநில அரசையும், மக்களையும் மனதார பாராட்டுகிறேன்.

அமெரிக்காவின் கலிஃபோர்னியாவை சேர்ந்த 2 பேர், சுவாமி விவேகானந்தரின் போதனைகளால் ஈர்க்கப்பட்டு அமர்நாத் புனித யாத்திரை மேற்கொண்டுள்ளனர். இதுதான் இந்தியாவின் சிறப்பு.

**100 வயது யோகா ஆசிரியர்:** சமீபத்தில் பிரான்ஸுக்கு சென்றபோது, அந்த நாட்டை சேர்ந்த ஷார்லோட் ஷோபாவை சந்தித்தேன். 100 வயதை தாண்டிய அவர்யோகா ஆசிரியர். கடந்த 40 ஆண்டுகளாக பிரான்ஸ் மக்களுக்கு யோகா கற்பித்து வருகிறார்.

அவரைப்போல, யோகா உள்ளிட்ட நமது பாரம்பரிய கலைகளை உலகம் முழுவதும் கொண்டு செல்ல வேண்டும்.

**சோழர் கால சிலைகள் மீட்பு:** தமிழகத்தின் சோழர் கால சிலைகள் உட்பட இந்தியாவை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட பண்டைய கலை படைப்புகளை அமெரிக்கா திருப்பி அளித்துள்ளது. அதில், தேவி, முருகப் பெருமான் சிலைகள் 12-ம் நூற்றாண்டை சேர்ந்தவை. ஆயிரம் ஆண்டு பழமையான விநாயகரின் வெண்கல சிலையும் நாடு திரும்பியிருக்கிறது. பாற்கடல் கடைதல் நிகழ்வை முன்னிறுத்தும் தென்னிந்திய மரப் பலகை 16-ம் நூற்றாண்டை சேர்ந்தது. விலைமதிப்பற்ற நம் சொத்துகளை திருப்பி அளித்த அமெரிக்க அரசுக்கு நன்றி.

நாடு முழுவதும் பெருமளில் போதை பொருட்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் ரூ.12,000 கோடி மதிப்புள்ள போதை பொருட்கள் அழிக்கப்பட்டன. போதை பொருட்கள் ஒழிப்பு இயக்கத்தை அனைவரும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

மத்திய பிரதேசத்தின் ஷஹ்டோல் அருகே உள்ள பிசார்புர் கிராமம் ஒரு காலத்தில் மதுப் பழக்கத்துக்கு அடிமையாகி இருந்தது. தேசிய கால்பந்து வீரர் ரயீஸ் அஹ்மத் முயற்சியால் தற்போது பிசார்புரில் இருந்து தேசிய, மாநில அளவில் 40-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் உருவாகி உள்ளனர்.

**என் மண், என் தேசம் இயக்கம்:** சுதந்திர தினத்தை முன்னிட்டு, நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களை நினைவுகூரும் வகையில் ‘என் மண் என் தேசம்' என்ற இயக்கம் தொடங்கப்பட உள்ளது. இதன்படி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 7,500 கலசங்களில் மண்நிரப்பப்பட்டு, அவற்றோடு சேர்த்து மரக்கன்று, செடிகளும் டெல்லிக்கு கொண்டு வரப்படும். அதைக் கொண்டு, தேசிய போர் நினைவுச் சின்னம் அருகே அமுத பூங்கா உருவாக்கப்படும்.

தேசத்தை வளர்ந்த நாடாக்கும் இலக்கு, அடிமைத்தனத்தை வேரறுப்பது, பாரம்பரிய பெருமிதம், ஒற்றுமையின் பலம், கடமையை நிறைவேற்றுதல் என அடுத்த 25 ஆண்டுகளுக்கான 5 உறுதிமொழிகள் குறித்து கடந்த சுதந்திர தினத்தின்போது செங்கோட்டையில் பேசினேன். ‘என் மண், என் தேசம்' இயக்கத்தில் பங்கேற்கும் அனைவரும் இதை சபதமாக ஏற்க வேண்டும். தேசத்தின் புனித மண்ணை கைகளில் ஏந்தி சபதம் ஏற்கும்போது செல்ஃபி புகைப்படம் எடுத்து yuva.gov.in இணையத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

கடந்த ஆண்டுபோல இந்த ஆண்டும் சுதந்திர தினத்தை ஒட்டி வீடுகள்தோறும் தேசியக் கொடியை பறக்கவிட வேண்டும். நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்த் தியாகம் செய்தவர்களின் கனவுகளை நனவாக்க இரவு பகல் பாராமல் உழைக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் பேசினார்.

**ஆண் துணையின்றி ஹஜ் பயணம்: முஸ்லிம் பெண்களுக்கு பாராட்டு**

‘மனதின் குரல்’ தொடர்பாக வந்திருக்கும் பல கடிதங்கள், குறிப்பாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்ட முஸ்லிம் பெண்கள் எழுதியுள்ள கடிதங்கள் மிகுந்த மனநிறைவை அளிக்கின்றன. இந்த பெண்கள் தங்களது ஹஜ் புனிதப் பயணத்தை, ஆண் துணை இல்லாமல் நிறைவு செய்துள்ளனர்.

ஒரு காலத்தில் முஸ்லிம் பெண்கள், ஆண் துணை இல்லாமல் ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்படவில்லை. தற்போது 4,000-க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள், ஆண் துணையின்றி ஹஜ் புனிதப் பயணத்தை நிறைவு செய்துள்ளனர். இது மிகப்பெரிய மாற்றமாகும். இதற்கு ஒத்துழைப்பு அளித்த சவுதி அரேபிய அரசுக்கு ‘மனதின் குரல்’ வாயிலாக நன்றி தெரிவிக்கிறேன்.

கடந்த சில ஆண்டுகளாக ஹஜ் கொள்கையில் ஏற்படுத்தப்பட்டு வரும் மாற்றங்கள் பாராட்டப்பட்டு வருகின்றன. குறிப்பாக முஸ்லிம் பெண்கள் கடிதங்கள் வாயிலாக எனக்கு நல்லாசி வழங்கி வருகின்றனர். இது உத்வேகம் அளிக்கிறது. இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**உலக பல்கலைக்கழக விளையாட்டு: இந்தியாவுக்கு 4-வது தங்கம்**




**புதுடெல்லி:** சீனாவில் நடைபெற்று வரும் உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியின் கலப்பு வில்வித்தை அணிப் போட்டியில் இந்தியா தங்கம் வென்றுள்ளது.

சீனாவின் செங்டு நகரில் உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் நேற்று கலப்பு வில்வித்தை அணிப்பிரிவு போட்டிகள் நடைபெற்றன.

இதில் இந்திய அணியின் சார்பில் அமன் சைனி, பிரகதி ஜோடி தங்கம் வென்றது.

உலக பல்கலைக்கழக விளையாட்டில் இந்தியா பெறும் 4-வது தங்கப் பதக்கமாகும் இது. இதுவரை 4 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலம் என 10 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் இந்தியா 4-வது இடத்தில் உள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் காம்பவுண்ட் அணிப் பிரிவில் இந்தியாவின் சங்கம்பிரீத் பிஸ்லா,அமன் சைனி, ரிஷப் யாதவ் ஆகியோர் அடங்கிய அணி வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

EVA STALIN IAS ACADEMY